**செய்தி வெளியீடு எண்: 795** **நாள்: 23.11.2017**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 21.11.2017 அன்று தலைமைச் செயலகத்தில், எரிசக்தித் துறையின் சார்பில் திருவள்ளூர் மாவட்டம் – மணலியில் 599 கோடியே 86 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 400/230–110 கி.வோ. வளிமக் காப்பு துணை மின் நிலையத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், தமிழகத்தின் 19 மாவட்டங்களில் 1745 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 30 துணை மின் நிலையங்களை திறந்து வைத்தார்கள்.

மின்பாதையில் ஏற்படுகின்ற மின் இழப்பையும், மின்பராமரிப்பு செலவினங்களையும் குறைத்து, ஒவ்வொரு பகுதிக்கும் தேவைப்படுகின்ற உச்சக்கட்ட மின் தேவையை நிறைவு செய்யும் வகையில் சரியான மின் அழுத்தத்துடன் மக்களுக்கு சீரான மின்சாரம் வழங்கிட கூடுதல் துணை மின் நிலையங்கள் அமைப்பது அவசியமாகும் என்பதைக் கருத்தில் கொண்டு, தேவைக்கேற்ப புதிய மற்றும் தரம் உயர்த்தப்பட்ட துணை மின் நிலையங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு அமைத்து வருகிறது.

அந்த வகையில், திருவள்ளூர் மாவட்டம் – மணலியில் 599 கோடியே 86 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 400/230–110 கி.வோ. வளிமக் காப்பு துணை மின் நிலையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், திருப்பூர் மாவட்டம் – ராசிபாளையம், திருநெல்வேலி மாவட்டம் – காணார்பட்டி ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள 400/230–110 கி.வோ. துணை மின் நிலையங்கள்; சென்னை – இராஜா அண்ணாமலைபுரத்தில் நிறுவப்பட்டுள்ள 230/33 கி.வோ. வளிமக் காப்பு துணை மின் நிலையம்; திருச்சிராப்பள்ளி மாவட்டம் – மொண்டிபட்டி, திருப்பூர் மாவட்டம் – குருக்கத்தி, திருவள்ளூர் மாவட்டம் – அம்பத்தூர் 3வது பிரதான சாலை, தஞ்சாவூர் மாவட்டம் – கும்பகோணம், மதுரை மாவட்டம் – கிண்ணிமங்கலம், அரியலூர் மாவட்டம் – பொய்யூர் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள 230/110 கி.வோ. துணை மின் நிலையங்கள்;

சென்னை – திருமங்கலம் தெற்கில் நிறுவப்பட்டுள்ள 110/33 கி.வோ. வளிமக் காப்பு துணை மின் நிலையம்; வேலூர் மாவட்டம் – கொரட்டி, திருவண்ணாமலை மாவட்டம் – கீழ்பென்னாத்தூர், கரூர் மாவட்டம் – சிந்தாமணிபட்டி, திருவாரூர் மாவட்டம் – நீலக்குடி, ஈரோடு மாவட்டம் – திங்களூர், இராமநாதபுரம் மாவட்டம் – ஏர்வாடி, மதுரை மாவட்டம் – வாடிப்பட்டி ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள 110/33 கி.வோ. துணை மின் நிலையங்கள்;

கோயம்புத்தூர் மாவட்டம் – தாளக்கரை மற்றும் கோமங்கலபுதூர், பெரம்பலூர் மாவட்டம் – அ.மேட்டூர், சிவகங்கை மாவட்டம் – பூசாலக்குடி, திருப்பூர் மாவட்டம் – செலாம்பாளையம் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள 110/22 கி.வோ. துணை மின் நிலையங்கள்;

ஈரோடு மாவட்டம் – புங்கம்பள்ளி, கன்னியாகுமரி மாவட்டம் – நடைக்காவு, திருப்பூர் மாவட்டம் – திருநகர் மற்றும் பூமலூர் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள 110/11 கி.வோ. துணை மின் நிலையங்கள்;

கோயம்புத்தூர் மாவட்டம் – எலச்சிபாளையம், நீலகிரி மாவட்டம் – ஒன்னட்டி, திருவாரூர் மாவட்டம் – கோட்டூர், திருநெல்வேலி மாவட்டம் – பரப்பாடி ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள 33/11 கி.வோ. துணை மின் நிலையங்கள்;

என மொத்தம் 2345 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 31 துணை மின் நிலையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி, மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாடு துறை அமைச்சர் திரு. கே. பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் எம். சாய்குமார், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 23.11.2017**